# உலகம்

## ஜி - 20 இந்தியா தலைமை

- ஜி - 20 அமைப்பில் அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், தென் கொரியா, மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகியவை இந்த அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள நாடுகள், ஜி - 20 அமைப்புக்கு ஒவ்வொரு ஆண்டும் தலைமை ஏற்கும்.
- டிசம்பர் 1, 2022 முதல் ஓராண்டு காலத்துக்கு ஜி - 20 அமைப்புக்கு இந்தியா தலைமை தாங்குகிறது. இதை முன்னிட்டு, நாடு முழுவதும் சுமார் 100 பாரம்பரிய சின்னங்கள், ஜி - 20 அடையாள சின்னத்துடன் மின்னொளியில் ஜொலிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாவின் ஜி - 20 தலைமை பொறுப்பு இந்த பிரபஞ்சம் முழுவதும் ஒன்றே என்னும் உணர்வை மேம்படுத்த பாடுபடும். எனவே, நமது கருப்பொருள் – 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பதாகும். இது வெறும் முழக்கம் மட்டுமல்ல. நாம் கூட்டாக மேற்கொள்ளத் தவறிய மனிதச் சூழல்களில், அண்மையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கருத்தில் கொண்டுள்ளது.
- இந்தியாவின் ஜி – 20 இன் மையப் பொருள் என்பது அனைவரையும் உட்படுத்தியதாக, லட்சியமிக்கதாக, செயல்பாடுகள் சார்ந்ததாக, உறுதியானதாக இருக்கும்.

- புனரமைத்தல், நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையின் தலைமையாக இந்தியாவின் ஜி - 20 தலைமையை உருவாக்க நாம் அனைவரும் ஒருங்கிணைவோம். மனித நேயத்தை மையமாக கொண்ட உலகம் என்ற புதிய முன்னுதாரணத்தை வடிவமைக்க நாம் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபடுவோம்.
- இயற்கையுடன் இணக்கத்துடன் வாழ்வதை பூமி உருண்டை குறிக்கிறது. உலகம் ஒரே குடும்பம் – வாசுதேவ குடும்பகம் அல்லது ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்பது தான், ஜி - 20 அமைப்புக்கான இந்திய தலைமையின் கருப்பொருள்.
- தேசிய வளர்ச்சி என்பதை மேல்தட்டு மற்றும் அடித்தட்டு ஆட்சி முறையாக அல்லாமல் மக்கள் தலைமையிலான மக்கள் இயக்கமாக உருவாக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.
- பொதுமக்களுக்கான டிஜிட்டல் சேவைகள் சிறந்த முறையில் அனைவரையும் உள்ளடக்கி, அனைவருக்கும் இடையே செயல்படக் கூடியதாக அமையும் வகையில் தொழில்நுட்பத்தை ஊக்குவித்துள்ளோம். இது சமூக பாதுகாப்பு, நிதி உள்ளடக்கம், மின்னணு பணப் பரிமாற்றம் உள்ளிட்ட பல துறைகளில் புரட்சிகரமான முன்னேற்றத்தை வழங்கியுள்ளது.
- நமது ஜி - 20 முன்னுரிமைகள், ஜி - 20 உறுப்பு நாடுகளுடான ஆலோசனைகளோடு மட்டுமே வடிவமைக்கபடாமல், இதுவரை இவர்களின் கருத்துகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாத, தென்பகுதி நாடுகளின் ஆலோசனைகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். ஒரே பூமியை சீர் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, ஒரே குடும்பம் என்ற நல்லிணக்கத்தை வளர்த்து, ஒரே எதிர்காலம் என்ற நம்பிக்கையை வழங்குவதில் நமது கவனம் திகழும்.

## பிரதிநிதிகள் கூட்டம்

- ஜி - 20 உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கூட்டம் ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் டிசம்பர் 4 ஆம் தேதியன்று தொடங்கியது. ஓராண்டுக்கு இந்தப் பொறுப்பில் இருக்கும் இந்தியா, அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் டெல்லியில் ஜி - 20 உச்சி மாநாட்டை நடத்த உள்ளது. அதற்கு முன்னதாக அடுத்த ஓராண்டில் நாட்டில் உள்ள 55 நகரங்களில் 200 கூட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- தொழில்நுட்ப, பரிமாற்றம், பசுமை வளர்ச்சி, நீடித்த வளர்ச்சி இலக்கு (எஸ்டிஜி) உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆலோசனை நடத்தப்பட உள்ளது. முதல் அமர்வில் டிஜிட்டல் பொருளாதாரத்தில் தொழில்நுட்ப மாற்றம், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. இரண்டாவது அமர்வில் பசுமை வளர்ச்சி மற்றும் இந்தியாவின் சுற்றுச்சூழலுக்கான வாழ்வியல் (லைப்) ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

## வர்த்தகம் 20 குழு

- உலக அளவில் பல்வேறு சவால்களும் பிரச்சினைகளும் நிலவி வருகின்றன. இந்தச் சூழலில், நவம்பர் 16 - 17 இல் இந்தோனேசியாவில் உள்ள பாலி தீவில் நடைபெற்ற ஜி 20 உச்சி மாநாட்டில் உலகத் தலைவர்கள் சர்வதேச அளவில் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும் என்று பூண்டனர். அதன் அடிப்படையில் ‘வர்த்தகம் 20’ (Business 20) என்ற பெயரில் வர்த்தக அலுவல் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ஜி 20 உச்சி மாநாட்டுக்கான தலைமைத்துவத்தை இந்தியா ஏற்றிருக்கிறது. ‘ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்’, என்பதை 2023 ஆம் ஆண்டுக்கான ஜி - 20 உச்சி மாநாட்டின் கருப்பொருளாக பிரதமர் மோடி முன்வைத்துள்ளார். இந்த உச்சி

மாநாட்டில் பொருளாதார வளர்ச்சி, முதலீடு, காலநிலை மாற்றத்துக்கான தீர்வுகள் மற்றும் டிஜிட்டல் மயமாக்குதல் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- இதற்கு உறுதுணையாக இருக்கும் நோக்கிலேயே ‘வர்த்தகம் 20’ அலுவல் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நமது தொழில் முனையும் திறன், புத்தாக்கச் சிந்தனை, சமூகச் பொறுப்பு மூலம் உலக அளவில் நமது ஆற்றலை வெளிப்படுத்தும் தளமாக ‘வர்த்தகம் 20’ இருக்கும்.

## டேங்கர் கப்பல் தயாரிக்க இந்தியாவுக்கு உதவி

- கச்சா எண்ணெய் விலை மீதான ஜி 7 நாடுகளின் உச்சவரம்பு உள்ளிட்ட கட்டுபாடுகளை சமாளிக்க, மிகப் பெரிய டேங்கர் கப்பலை தயாரிக்க இந்தியாவுக்கு உதவ தயார் என ரஷ்யா அறிவித்துள்ளது.
- உக்ரைன் மீது போர் தொடுத்ததால் ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகள் பொருளாதார தடை விதித்தன. இதையடுத்து, கச்சா எண்ணையை தள்ளுபடி விலையில் வழங்க ரஷ்யா முன்வந்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட இந்தியா, அந்த நாட்டிடமிருந்து இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெயை அதிகரித்தது.
- ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கும் முடிவுக்கு மேற்கத்திய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன. ஆனால், நாட்டு நலன் கருதி குறைந்த விலையில் கச்சா எண்ணையை வாங்க உரிமை உள்ளது.
- மேலும் உச்ச வரம்பை மீறி கூடுதல் விலையில் விற்கப்படும் கச்சா எண்ணையை ஏற்றிச் செல்ல கப்பல்கள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் 5 ஆம் தேதிக்கு முன்பே கப்பலில் ஏற்றப்பட்ட கச்சா எண்ணையை ஜனவரி 19 ஆம் தேதிக்குள் விநியோகிக்க தடை இல்லை.

- ரஷ்ய கச்சா எண்ணெய் மீது விதிக்கப்பட்டுள்ள விலை உச்ச வரம்பை ஆதரிக்கப் போவதில்லை என்ற இந்தியாவின் முடிவை துணைப் பிரதமர் அலெக்சாண்டர் நோவாக் வரவேற்றுள்ளார்.
- ஐரோப்பிய யூனியன் மற்றும் பிரிட்டனைச் சேர்ந்த கப்பல் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினையை சமாளிக்க பெரிய டேங்கர் கப்பல்களை தயாரிக்கவோ குத்தகைக்கு எடுக்கவோ இந்தியாவுக்கு தேவையான உதவிகளை செய்ய தயாராக உள்ளோம் என்றார்.

## இந்தியா

### உச்ச நீதிமன்றத்தில் முழு பெண் நீதிபதிகள் அமர்வு

- உச்ச நீதிமன்றத்தில் முழு பெண் நீதிபதிகள் அமர்வை தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் ஏற்படுத்தியுள்ளார்.
- உச்ச நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட நீதிபதி பணியிடங்கள் 34 ஆகும். எனினும் தற்போது தலைமை நீதிபதி உட்பட 27 நீதிபதிகள் மட்டுமே உள்ளனர். இவர்களில் ஹிமா கோலி, பி.வி.நாகரத்னா, பேலா எம்.திரிவேதி ஆகிய 3 பெண் நீதிபதிகள் உள்ளனர்.
- இந்த அமர்வு திருமணத் தகராறு தொடர்பான வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு அல்லது வேறு விசாரணை அமைப்புக்கு மாற்றக் கோரும் மனுக்கள் மற்றும் ஜாமீன் விவகாரங்களை விசாரிக்க உள்ளது. இந்த அமர்வு முன் 32 மனுக்கள் பட்டியலிடப் பட்டுள்ளன.

- உச்ச நீதிமன்றத்தில் முழுவதும் பெண் நீதிபதிகளை கொண்ட அமர்வு முதன்முதலாக கடந்த 2013 இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் நீதிபதிகள் கயான் சுதா மிஸ்ரா, ரஞ்சனா பிரகாஷ் தேசாய் ஆகியோர் இடம் பெற்றிருந்தார்.
- 2018 இல் இரண்டாவது முறையாக முழு பெண் நீதிபதிகள் அமர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் நீதிபதிகள் ஆர்.பானுமதி, இந்திரா பானர்ஜி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தில் தற்போது மூன்றாவது முறையாக முழு பெண் நீதிபதிகள் அமர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நீதிபதிகள் நாகரத்னா வரும் 2027 இல் உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாக பதவியேற்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு மருத்துவர்களுக்கு சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்புகளில் 50 % இட ஒதுக்கீடு

- நடப்பு கல்வியாண்டில் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்ற அரசு மருத்துவர்களுக்கு சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவப் படிப்புகளில் 50 சதவீத இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தி 15 நாட்களுக்குள் நிரப்ப உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியது.
- சூப்பர் ஸ்பெஷாலிட்டி எனப்படும் சிறப்பு மருத்துவ மேற்படிப்புகளில், அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வழங்கி, கடந்த 2000 நவம்பரில் தமிழக அரசு அரசாணை பிறப்பித்தது.
- நீதிபதிகள் பி.ஆர்.கவாய், விக்ரம்நாத், அமர்வில் இந்த வழக்கு டிசம்பர் 2 விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு சார்பில், “சூப்பர் ஸ்பெஷாலிட்டி படிப்புகளில் அரசு மருத்துவர்களுக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வழங்க தமிழக அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது”.

## டிஜிட்டல் தனி நபர் தரவு பாதுகாப்பு மசோதா

- "எதிர்காலத்தில் இந்தியர்கள் எல்லா இடத்திலும் நிறைந்திருப்பார்கள்" என ஐக்கிய அரபு அமீரகத்தின் டிஜிட்டல் துறை அமைச்சர் சமீபத்தில் கூறினார். வேகமாக டிஜிட்டல் மயமாகிவரும் உலகில், இந்தியாவின் மதிப்பு விரிவடைந்து வருகிறது என்பதுதான் இதன் அர்த்தம்.
- 30 ஆண்டுகளாக அனைத்து தொழில்நுட்பங்களின் கட்டிடக் கலை நிபுணர் வடிவமைப்பாளர், தொழில்நுட்ப தளங்களின் உற்பத்தியாளர், தீர்வுகள், உபகரணங்கள் மற்றும் உற்பத்தி பொருட்கள் என இந்தியாவின் தொழில்நுட்ப திறன்கள் பெருமளவுக்கு வளர்ந்துள்ளன.
- நமது இளைஞர்கள் விண்வெளி முதல் தொழில்நுட்ப வரை, செயற்கை நுண்ணறிவு முதல் வெப் - 3, இணைய தளம் முதல் மின்னணுவியல் / செமிகண்டக்டர்கள் வரை நம்பிக்கையுடன் புதிய கண்டுபிடிப்புகளை உலகுக்கு அளித்து வருகிறார்கள்.
- 820 மில்லியனுக்கும் அதிகமான இணையதள பயன்பாட்டியாளர்களைக் கொண்ட இந்தியா விரைவில் 1.2 பில்லியன் என்ற அளவை தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகின் மிக அதிக அளவிலான இணையதள பயன்பாடு கொண்ட ஜனநாயக நாடாக இந்தியா மாறியுள்ளது.
- ஜி - 20 தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ள நிலையில் செயற்கை நுண்ணறிவு உலக கூட்டாண்மை கவுன்சிலிங் தலைமை பொறுப்பையும் அண்மையில் ஏற்றுள்ளது. எதிர்காலத் தொழில்நுட்பத்தை வடிவமைப்பதில் இந்தியா இயல்பான வழியில் செயல்பட முடியும் என்பது தெரிய வந்துள்ளது.
- இந்த சவால்களைச் சமாளிக்க சட்டங்களால் மட்டும் முடியாது. எதிர்காலத்துக்கு தயாராகும் மாற்றங்கள் மிகவும் அவசியம். எனவே மத்திய மின்னணுவியல் மற்றும்

தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் புதிய முற்போக்கான அணுகுமுறையை கையாண்டு அதில் பொறுப்புடமை, பாதுகாப்பு, நம்பிக்கை ஆகியவற்றை ஒழுங்கு முறை சுமைகளை அதிகரிக்காமல் உறுதி செய்ய முடிவு செய்துள்ளது.

- மாறி வரும் தொழில்நுட்ப தேவைகளுக்கு ஏற்ப விரைவான அணுகுமுறையை கையாள முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறை, பொது மக்கள் / நுகர்வோரின் நலன்களை பாதுகாக்க வகை செய்கிறது.
- தனி நபர் பாதுகாப்பு உரிமை குறித்த தீர்ப்பு 2017 இல் வெளியானது முதல் நம்பிக்கை, வளர்ச்சி, நிர்வாகம் ஆகியவற்றின் மூலம் டிஜிட்டல் பொருளாதாரத்தை காணும் முயற்சிகள் தொடர்கின்றன.

## இந்திய குடியுரிமையை துறந்த 16 லட்சம் பேர்

- கடந்த 11 ஆண்டுகளில் மட்டும் 16 லட்சம் பேர் இந்திய குடியுரிமையை துறந்து வெளிநாடுகளில் குடியேறியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இது குறித்து மத்திய வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி.முரளீதரன் மக்களவையில் கூறியது. நடப்பாண்டில் அக்டோபர் 31 வரையிலான நிலவரப்படி 1,83,741 பேர் இந்திய குடியுரிமையை துறந்துள்ளனர். இந்த எண்ணிக்கை 2015 இல் 1,31,489 ஆகவும், 2017 இல் 1,33,049 ஆகவும், 2018 இல் 1,34,561 ஆகவும், 2019 இல் 1,44,017 ஆகவும் இருந்தன. கடந்த 2021 இல் மட்டும் 1,63,370 பேர் இந்திய குடியுரிமையை விட்டு விலகியுள்ளனர்.
- அதன்படி கடந்த 2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் மொத்தம் 16,21,561 பேர் இந்திய குடியுரிமையை விலக்கிக் கொண்டு வெளிநாடுகளில் குடியேறியுள்ளனர்.

- வங்கதேசம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் தவிர்த்த இதர வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு 2015 இல் 93 பேருக்கும், 2016 இல் 153 பேருக்கும், 2017 இல் 175 பேருக்கும், 2018 இல் 129 பேருக்கும், 2019 இல் 13 பேருக்கும், 2020 இல் 27 பேருக்கும், 2021 இல் 42 பேருக்கும் இந்திய குடியுரிமை வழங்கப்பட்டது. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## நரிக் குறவர், குருவிக்காரர்களை எஸ். டி. பிரிவில் சேர்க்கும் மசோதா

- நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர் சமூகத்தினருக்கு பழங்குடியினர் (எஸ்டி) அந்தஸ்து அளிக்க வகை செய்யும் மசோதா டிசம்பர் 15 தேதியன்று மக்களவையில் நிறைவேறியது.
- இந்த மசோதாவை பழங்குடியினர் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் அர்ஜுன் முண்டா மக்களவையில் தாக்கல் செய்தார்.
- அப்போது அவர், "தமிழகத்தை சேர்ந்த நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர் சமூகத்தினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என தமிழக அரசு பரிந்துரை செய்திருந்தது. அதன் அடிப்படையிலும் இந்திய பதிவாளர் ஜெனரல் மற்றும் தேசிய பழங்குடியினர் ஆணையத்தின் ஆலோசனையின் பேரிலும் அரசியலமைப்பு சட்ட பழங்குடியினர் பட்டியலில் உரிய திருத்தம் செய்ய இந்த மசோதா வகை செய்கிறது" என்றார்.
- இந்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விதிகள் உருவாக்கப் பட்டவுடன், நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள், எஸ்.டி. பிரிவினருக்கான அனைத்து சலுகைகளையும் பெறுவார்கள்.

## வந்தே பாரத் ரயில்

- ஹவுரா – நியூஜல்பைகுரி இடையே நாட்டின் ஏழாவது வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலை, மேற்கு வங்கத்தில் ரூ.5000 கோடி மதிப்பிலான ரயில்வே திட்டத்தையும் பிரதமர் மோடி டிசம்பர் 30 அன்று தொடங்கி வைத்தார்.
- வந்தே மாதரம் கோஷம் உருவான மண்ணிலிருந்து வந்தே பாரத் ரயில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 30 ஆம் தேதி முக்கியமான நாள், அந்தமான் நிகோபர் தீவுகளில் கடந்த 1943 ஆம் ஆண்டில் இதே நாளில் தான் சுபாஷ் சந்திர போஸ் தேசியக் கொடியை ஏற்றினார்.

## பூபேந்திர படேல்

- குஜராத்தின் 18-வது முதல்வராக பூபேந்திர ரஜினிகாந்த் படேல் (62) டிசம்பர் 12 பதவியேற்றார். அவருடன் 8 கேபினட் அமைச்சர்கள் உள்ளிட்ட 16 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.
- குஜராத் சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 182 தொகுதிகளில், பாஜக 156 இடங்களைக் கைப்பற்றி, வரலாறு காணாத வெற்றி பெற்றது. ஏற்கெனவே 6 முறை ஆட்சி அமைத்துள்ள பாஜக, 7 வது முறையாக ஆட்சியைப் பிடித்து சாதனை படைத்தது.
- குஜராத்தின் 18-வது முதல்வராக பூபேந்திர ரஜினிகாந்த் படேலுக்கு, ஆளுநர் ஆச்சார்ய தேவ்விரத் பதவிப் பிரமாணம் செய்து வத்தார். தொடர்ந்து, 16 அமைச்சர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர்.
- 2021 செப்டம்பர் 11 ஆம் தேதி, அப்போதைய முதல்வர் விஜய் ரூபானி ராஜினாமா செய்தார். தொடர்ந்து 2021 செப்டம்பர் 13 ஆம் தேதி குஜராத்தின் 17 வது முதல்வராக

பூபேந்திர ரஜினிகாந்த் படேல் பதவியேற்றார். தற்போது 2 வது முறையாக அவர் முதல்வராகப் பதவியேற்றார்.

### சுக்விந்தர் சிங் சுக்கு

- இமாச்சலப் பிரதேசத்தின் 15 வது முதல்வராக சுக்விந்தர் சிங் சுக்கு (58), துணை முதல்வராக அக்னி ஹோத்ரி (60) டிசம்பர் 11 அன்று பதவியேற்றார்.
- முதல்வராகப் பதவியேற்றுள்ள சுக்விந்தர் சிங் சுக்கு, ஹமிர்புர் மாவட்டம் நடான் சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினராவார். இவர் சட்டப்பேரவைக்கு 4 முறை தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- 2013 முதல் 2019 வரை காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவராக பொறுப்பு வகித்துள்ளார்.

## சுற்றுச்சூழல்

### ‘நீலகிரி வரையாடு திட்டம்’

- தமிழகத்தின் மாநில விலங்கான நீலகிரி வரையாடு இனத்தைப் பாதுகாக்கவும், அதன் வாழ்விடங்களை மேம்படுத்தவும் நாட்டிலேயே முதல்முறையாக நீலகிரி வரையாடு திட்டத்தை ரூ.25.14 கோடி மதிப்பில் செயல்படுத்த தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- நீலகிரி வரையாடு, மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கே உரித்தான சிறப்புகளில் ஒன்றாகும். வரையாடு இனத்தைப் பாதுகாக்கவும், அதன் வாழ்விடங்களை மேம்படுத்தவும் குறிப்பிடத்தக்கது.
- ஆண்டுக்கு இரு முறை ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு, டெலிமெட்ரிக் ரேடியோ காலரிங் (Collaring) பொருத்தி தொடர்ந்து பாதுகாத்தல், நோய்களைக் கண்டறிதல்,

பாதிக்கப்பட்ட வரையாட்டுக்கு சிகிச்சை அளித்தல், ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 7 ஆம் தேதியை ‘வரையாடு தினம்’ என அனுசரித்தல், மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நீலகிரி வரையாடுகள் இனத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். 3,122 வரையாடுகள் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

## குமரி தேன்

- நாகர்கோவிலில் நடந்த தேசிய தேன் கருத்தரங்கில் பேச்சிப்பாறை தேனீ மகத்துவ மையத்தில் உற்பத்தி செய்யப்படும் தேனுக்கு ‘குமரி தேன்’ என பெயர் சூட்டப்பட்டது.
- கன்னியாகுமரி மாவட்ட தோட்டக் கலையின் மலைப் பயிர்கள் துறை சார்பில் நாகர்கோவில் இந்து கல்லூரியில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தேன் தொடர்பான சாத்தியக் கூறுகள் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது.
- தமிழ்நாட்டில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் இயற்கையாகவே தேனீ வளர்ப்புக்கான மகரந்தத்தை தரக் கூடிய தாவரங்களை கொண்ட சிறப்பு பெற்றுள்ளது. இதன் காரணமாக தேனீ வளர்ப்பு 1920 ஆம் ஆண்டு முதல் இங்கு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது.
- “மார்த்தாண்டம் தேனீ பெட்டிகள்” ஏபிஸ் செரினா வகை தேனீக்களை வளர்ப்பதில் வெற்றி கண்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் தேனீ பெட்டிகள் உற்பத்தி மற்றும் தேன் உற்பத்தி செய்வதில் மார்த்தாண்டம் முன்னோடியாக திகழ்கிறது.
- பேச்சிப்பாறையில் உள்ள தேனீ மகத்துவ மையத்தில் உற்பத்தி செய்யப்படும் தேனை “குமரித் தேன்” என்ற பெயரில் அறிமுகப்படுத்தினர்.

## லண்டன் பூங்காவுடன் இணைந்து தாவரவியல் பூங்கா

- லண்டனில் உள்ள ராயல் தாவரவியல் பூங்காவுடன் இணைந்து செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூர் கிராமத்தில் ரூ.300 கோடியில் தாவரவியல் பூங்கா அமைக்க தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
- செங்கல்பட்டு மாவட்டம், கடம்பூர் கிராமத்தில் 137 ஹெக்டேர் பரப்பளவில் தாவரவியல் பூங்கா அமைப்பதற்காக தமிழ்நாடு அரசு டிசம்பர் 28 ஆம் தேதி அரசாணை வெளியிட்டது. இத்திட்டம் 2027 ஆம் ஆண்டுக்குள் செயல்படுத்தப்படும்.
- இந்தத் திட்டத்தில் பூர்வீக இனங்களின் தோட்டம், ஆர்போரே டம்ஸ், பேம்புசிடம்ஸ், மரக் கன்றுகள் மற்றும் ஹீலிங் கார்டன், மூலிகைத் தோட்டம், ரோஜா தோட்டம், ராக்கரி, ஜப்பானிய தோட்டம், பண்டைய தமிழ்நாட்டின் நிலப் பரப்பு போன்ற கூறுகளும் இடம் பெற்றிருக்கும்.
- இத்தாவரவியல் பூங்கா லண்டன் கியூவில் உள்ள ராயல் தாவரவியல் பூங்காவுடன் இணைந்து அமைக்கப்படும். இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தனியாக கையெழுத்திடப்படும்.
- மண், நீர் மற்றும் சுற்றுச்சூழல் மதிப்பீடு, திட்டப் பகுதியைச் சுற்றி வேலி அமைத்தல் போன்றவற்றுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க அரசு சார்பில் ரூ. 1 கோடி விடுவித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

# பொருளாதாரம்

## அடுத்த 2 ஆண்டுகளில் ஒரு கோடி வேலைவாய்ப்பு

- டிஜிட்டல் பொருளாதாரத்தில் அடுத்த 2 ஆண்டுகளில் 1 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.
- டிஜிட்டல் பொருளாதாரத்தின் மூன்று பெரிய தூண்களாக எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தி, தகவல் தொழில்நுட்ப சேவை மற்றும் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் விளங்குகின்றன. இவை 88 – 90 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.
- வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைவாய்ப்புகள் தற்போது முக்கிய அங்கம் வகிக்கின்றன.
- இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்காக்கள் (எஸ்டிபிஐ) இயக்குநர் அர்விந்த் குமார் பேசும் போது, “64 நகரங்களில் விரைவாக தொழில் தொடங்குவதற்கான கட்டமைப்புகளை எங்கள் நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. இவற்றில் 54 நகரங்கள் டயர் 2 மற்றும் டயர் 3 நகரங்கள் ஆகும். ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு தொடக்க நிதியுதவியாக நாங்கள் ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை வழங்குகிறோம். அடுத்த தலைமுறைக்கான திட்டங்களில் டயர் 2, டயர் 3 நகரங்களில் தொடங்கப்படும் ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு ரூ.25 லட்சம் வழங்குகிறோம்” என்றார்.

## டிஜிட்டல் ரூபாய் பரிவர்த்தனை

- சில்லறைப் பயன்பாட்டுக்கான டிஜிட்டல் ரூபாய் பரிவர்த்தனை சோதனை அடிப்படையில் டெல்லி, மும்பை உள்ளிட்ட நான்கு நகரங்களில் டிசம்பர் 1 தொடங்கப்பட்டது.

- காகித, கிரிப்டோ கரன்சிகளுக்கு மாற்றாக டிஜிட்டல் வழிமுறையிலான பணப் பரிவர்த்தனையை அறிமுகப்படுத்த ரிசர்வ் வங்கி தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வந்தது.
- முதல்கட்டமாக சோதனை அடிப்படையில் சில்லறைப் பயன்பாட்டுக்கான டிஜிட்டல் ரூபாய் டெல்லி, மும்பை, பெங்களூரு, புவனேஸ்வர் ஆகிய நான்கு முக்கிய நகரங்களில் டிசம்பர் 1 முதல் மக்களின் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.
- இந்த நான்கு நகரங்களிலும் டிஜிட்டல் ரூபாயை கையாளும் பொறுப்பு ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, ஐசிஐசிஐ வங்கி, யெஸ் வங்கி மற்றும் ஐடிஎஃப்சி பர்ஸ்ட் வங்கிகளிடம் டிஜிட்டல் ரூபாய் பரிவர்த்தனையை தொடங்கியுள்ளது.
- இ - ரூபாய் (e - Rupee) எனப்படும் டிஜிட்டல் ரூபாய் (Digital Currency) காகித ரூபாயைப் போன்றே மதிப்புகளைக் கொண்டிருக்கும். வங்கிகள் வழங்கும் டிஜிட்டல் ரூபாயை வாடிக்கையாளர்கள் தங்களது மொபைல் போனில் உள்ள டிஜிட்டல் வாலெட்டிலேயே சேமித்து வைக்க முடியும்.
- தேவைப்படும் போது மற்றொரு நபருக்கு அல்லது கடைகளுக்கு கியூர்ஆர்கோடு (QR Code) மூலமாக வாலெட்டிலிருந்து டிஜிட்டல் ரூபாயை பரிவர்த்தனை செய்து கொள்ள முடியும்.
- சோதனை அடிப்படையில் தற்போது சில்லறைப் பயன்பாட்டு உபயோகத்துக்கு வந்துள்ள டிஜிட்டல் ரூபாயின் நிறை குறைகளை ரிசர்வ் வங்கி தீவிரமாக ஆய்வு செய்யும். அதன் பின்னர், அதில் காணப்படும் சிக்கல் மற்றும் குறைகள் களையப்பட்டு நாடு முழுவதும் டிஜிட்டல் ரூபாய் பயன்பாட்டை ரிசர்வ் வங்கி விரிவுபடுத்தும்.

## நேரடி வரி வசூல் 24 சதவீதம் அதிகரிப்பு

- நடப்பு நிதியாண்டில் இதுவரை நேரடி வரி வசூல் 24 % அதிகரித்து ரூ.8.77 லட்சம் கோடியாக உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. நடப்பு 2022 - 23 நிதியாண்டில் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் நேரடி வரியாக ரூ.8.77 லட்சம் கோடி வசூலாகி உள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும் போது 24.26% அதிகம்.
- நடப்பு நிதியாண்டில் நேரடி வரியாக மொத்தம் ரூ.14.2 லட்சம் கோடி வசூலாகும் என பட்ஜெட்டில் மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கடந்த 8 மாதங்களில் மட்டும் 61.79% வசூலாகி உள்ளது. கடந்த 2021 - 22 நிதியாண்டில் நேரடி வரியாக ரூ.14.1 லட்சம் கோடி வசூலானது குறிப்பிடத்தக்கது.
- தனி நபர் வருவாய் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களின் வருவாய் மீது விதிக்கப்படும் வரி நேரடி வரி (Direct Tax) என அழைக்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் இதுவரை, கூடுதலாக வரி செலுத்தியவர்களுக்கு ரூ.2.15 லட்சம் கோடி ரீபண்ட் வழங்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 67% அதிகம் ஆகும்.
- சரக்கு மற்றும் சேவை வரியாக (ஜிஎஸ்டி) (Goods and Service Tax) மாதந்தோறும் ரூ.1.45 லட்சம் கோடி முதல் ரூ.1.5 லட்சம் கோடி வரை வசூலாகி வருகிறது. இது மறைமுக வரி (Indirect Tax) என அழைக்கப்படுகிறது.

## பணவீக்கத்தை குறைக்க மத்திய அரசு நடவடிக்கை

- உணவு, எரிபொருள் மற்றும் உற்பத்தி துறையைச் சேர்ந்த பொருட்களின் விலை குறைந்து காணப்பட்டதையடுத்து கடந்த நவம்பர் மாதத்தில் மொத்த விற்பனை விலை குறியீட்டெண் (டபிள்யூபிஐ) (Wholesale Price Index - WPI)

அடிப்படையிலான பணவீக்கம் (Inflation) 5.85 சதவீதமாக குறைந்தது. இது முந்தைய 21 மாதங்களில் காணப்படாத வகையிலான குறைந்த பணவீக்க விகிதமாகும்.

- கடந்த மே மாதம் முதற்கொண்டே பணவீக்கம் குறையத் தொடங்கி அக்டோபரில் அது ஒற்றை இலக்கமான 8.39 சதவீதத்தை அடைந்தது.
- அக்டோபரில் 8.33 சதவீதமாக அதிகரித்திருந்த உணவு பொருட்களுக்கான பணவீக்கம் நவம்பரில் 1.07 சதவீதமாக சரிவடைந்துள்ளது. மேலும் காய்கனிகளுக்கான பணவீக்கமும் 17.61 சதவீதத்திலிருந்து (-) 20.08 சதவீதமானது.
- எரிபொருள் மற்றும் மின்சார தொகுப்புக்கான பணவீக்கம் 17.35 சதவீதமாகவும், உற்பத்தி துறை தயாரிப்புகளுக்கான பணவீக்கம் 3.59 சதவீதமாகவும் இருந்தன.

## அறிவியல் & தொழில்நுட்பம்

### 2 மற்றும் 3 சக்கர மின் வாகனங்களுக்கு மாற ரூ.23 லட்சம் கோடி நிதி

- இந்தியாவில் முழுமையான அளவில் 2 மற்றும் 3 சக்கர மின் வாகனங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வர ரூ. 23 லட்சம் கோடி நிதி தேவைப்படும் என்று உலக பொருளாதார மன்றம் தெரிவித்துள்ளது.
- நிதி ஆயோக் (NITI Aayog) உடன் இணைந்து உலக பொருளாதார மன்றம் இந்தியாவின் மின் வாகன நிலவரம் குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவில் தற்போது பயன்பாட்டில் உள்ள வாகனங்களில் 80 சதவீதம் 2 மற்றும் 3 சக்கர வாகனங்கள் ஆகும். 26.4 கோடி இரு சக்கர வானங்களும் 60 லட்சம் 3 சக்கர வாகனங்களும் இந்தியாவில் உள்ளன.
- இதில் சராசரியாக இரு சக்கர வாகனத்தின் மதிப்பு ரூ.81,000 எனவும், மூன்று சக்கர வாகனத்தின் மதிப்பு ரூ.2.8 லட்சம் எனவும் கணக்கில் கொள்ளும் பட்சத்தில் இந்த 27

கோடி வாகனங்களை முழுமையாக மின் வாகனங்களாக மாற்ற ரூ.23 லட்சம் கோடி (285 பில்லியன் டாலர்) நிதி தேவைப்படும்.

- இந்தியாவில் தற்சமயம் 45 நிறுவனங்கள் 2 மற்றும் 3 சக்கர மின் வாகனத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில் மின் வாகனங்களின் புழக்கத்தை அதிகரிக்க வேண்டுமென்றால், அது தொடர்பாக நீண்ட கால அடிப்படையில் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

## அக்னிப் பாதை திட்டம்

- அக்னிப் பாதை திட்டத்தின் கீழ் இந்திய கடற்படையில் முதல் முறையாக 341 பெண் மாலுமிகள் சேர்க்கப்பட்டு உள்ளனர்.
- அக்னிப்பாதை திட்டத்தின் கீழ் 3,000 வீரர்கள் கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் 341 பேர் பெண்கள். முதல் முறையாக கடற்படையில் பெண் மாலுமிகளை சேர்த்துள்ளோம்.
- அக்னி பாதை திட்டத்தின் கீழ் ராணுவத்தின் முப்படைகளுக்கும் வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். அக்னி விரர்கள் என அழைக்கப்படும் இவர்கள் 4 ஆண்டுகள் பணியாற்றுவர்.
- அதன்பின் இவர்கள் 25 சதவீதம் பேர் மறு தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வழக்கமான பணியில் 15 ஆண்டு காலம் பணியாற்றுவர். மற்றவர்களுக்கு துணை ராணுவப் படை மற்றும் மாநில போலீஸ் படைப் பிரிவில் சேர இட ஒதுக்கீடு வழங்கப்படும்.

- கடற்படையில் பெண் அதிகாரிகள் 30 ஆண்டுகளுக்கு முன்பே தேர்வு செய்யப்பட்டனர். ஆனால் மாலுமிகளாக பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதுவே முதல் முறை. ஐஎன்எஸ் சில்கா கடற்படை தளத்தில் பயிற்சி பெற உள்ளனர்.

## 100 பெரிய ராணுவ தளவாட உற்பத்தி நிறுவனங்கள் பட்டியல்

- உலக அளவில் உள்ள 100 மிகப் பெரிய ராணுவத் தளவாட நிறுவனங்களை சுவீடனைத் தலைமையிடமாகக் கொண்ட ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) பட்டியலிட்டுள்ளது. அதில் இந்தியாவைச் சேர்ந்த இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் (HAL), பாரத் எலக்ட்ரானிக்ஸ் (BHEL) ஆகிய 2 பொதுத் துறை நிறுவனங்கள் இடம் பிடித்துள்ளன.
- சென்ற ஆண்டில் இந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனத்தின் தளவாட விற்பனை ரூ.27,000 கோடியாக உள்ள நிலையில் இந்தப் பட்டியலில் 42 வது இடத்தைப் பிடித்துள்ளது. பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் 63 வது இடத்தில் உள்ளது. சென்ற ஆண்டில் அதன் விற்பனை ரூ.14,760 கோடி ஆகும்.
- விநியோகச் சங்கிலியில் நெருக்கடி ஏற்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 இல் ராணுவ தளாட விற்பனை அதிகரித்து இருக்கிறது என்று ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## 5,500 கி.மீ. தொலைவு அக்னி - 5 ஏவுகணை சோதனை வெற்றி

- கடந்த 1989 ஆம் ஆண்டில் அக்னி 1 ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. அடுத்தடுத்து அக்னி 2, 3, 4, 5 ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டன. கடந்த 2012, 2013, 2015 ஆம் ஆண்டுகளில் கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி 5 ஏவுகணை சோதனைகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

- இந்த வரிசையில் ஒடிசாவில் உள்ள அப்துல் கலாம் தீவில் டிசம்பர் 15 அன்று மீண்டும் அக்னி 5 ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது. இது 5,500 கி.மீ. தொலைவு சீறிப் பாய்ந்து இலக்கை துல்லியமாக தாக்கி தகர்த்தது.
- இது குறித்து மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வட்டராங்கள் கூறும் போது, “கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி 5 ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டிக்கிறது. இந்த ஏவுகணை மூலம் சீன தலைநகர் பெய்ஜிங் மீது எளிதாக தாக்குதல் நடத்தலாம்.
- 17.5 மீட்டர் நீளம், 2 மீட்டர் விட்டம் கொண்ட அக்னி 5 ஏவுகணை 50,000 கிலோ எடை கொண்டதாகும். மணிக்கு 29,401 கி.மீ. வேகத்தில் சீறிப் பாயும். 1,100 கிலோ எடை வரையிலான அணு ஆயுதங்களை சுமந்து செல்லும். இந்த ஏவுகணை 8,000 கி.மீ. வரை சீறிப் பாயும் வகையில் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

## 36 வது ரஃபேல் போர் விமானம் ஒப்படைப்பு

- பிரான்ஸின் தஸ்ஸோ நிறுவனத்திடம் இருந்து ரூ.59 ஆயிரம் கோடிக்கு 36 ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதற்கு கடந்த 2016 ஆம் ஆண்டு பிரான்ஸ் அரசுடன் மத்திய அரசு ஒப்பந்தம் செய்திருந்தது.
- அதில் முதல் கட்டமாக கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலையில் 5 விமானங்கள் அம்பாலா விமானப் படை தளத்துக்கு வந்து சேர்ந்தன. அதன் பிறகு படிப்படியாக 30 விமானங்கள் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் ஒரே ஒரு ரஃபேல் விமானத்தை மட்டும் பிரான்ஸ் வழங்க வேண்டியிருந்தது. தற்போது அந்த விமானமும் இந்தியாவை வந்தடைந்துள்ளது.

- ரஃபேல் போர் விமானத்தில் ரேடார் எச்சரிக்கை ரிசீவர்கள், கண்காணிப்பு அமைப்பு, ஏவுகணை எச்சரிக்கை அமைப்பு உள்ளிட்ட பல்வேறு நவீன அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.

## ஐஎன்எஸ் வகிர் நீர்மூழ்கி கப்பல்

- கடற்படை பயன்பாட்டுக்காக மும்பையில் தயாரிக்கப்பட்ட ஐஎன்எஸ் வகிர் நீர் மூழ்கிக் கப்பல் கடற்படையிடம் டிசம்பர் 20 ஆம் தேதி ஒப்படைக்கப்பட்டது. இது விரைவில் கடற்படையில் சேர்க்கப்பட உள்ளது.
- கடற்படை பயன்பாட்டுக்காக பிரான்ஸ் நிறுவனத்துடன் இணைந்து 5 ஸ்கார்பீன் ரக நீர்மூழ்கிக் கப்பல்கள் மும்பையில் உள்ள மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்தில் உருவாக்கப்பட்டன. மொத்தம் 6 கப்பல்கள் கட்டப்பட்டன.
- ஏற்கெனவே ஐஎன்எஸ் கல்வாரி, கந்தேரி, கரன்ஜ் மற்றும் வேலா ஆகிய 4 ஸ்கார்ப்பீன் ரக நீர்மூழ்கி கப்பல்கள் கடற்படைக்கு வழங்கப்பட்டு விட்டன. 5 வது நீர் மூழ்கிக் கப்லாக ஐஎன்எஸ் வகிர் கடற்படையிடம் டிசம்பர் 20 அன்று ஒப்படைக்கப் பட்டது.
- ஐஎன்எஸ் வகிர் நீர்மூழ்கி கப்பல் கடந்த 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கடலில் இறக்கப்பட்டது. இதன் பரிசோதனைகள் பிப்ரவரி மாதம் தொடங்கின.

# தமிழ்நாடு

## திருக்குறள் இந்தி மொழிபெயர்ப்பு நூல்

- உலகத் திருமறையாகக் கருதப்படும் திருக்குறள் பல்வேறு மொழிகளில் மத்திய அரசால் மொழி பெயர்க்கப்படுகிறது. பிரதமர் மோடியின் விருப்பப்படி இதை இந்திய,

சர்வதேச அளவில் 100 மொழிகளில் வெளியிட செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் (CICT) தீவிரம் காட்டி வருகிறது.

- இந்நிறுவனத்தின் 13 மொழிகளிலான திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல்களை காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சியில் நவம்பர் 19 ஆம் தேதி பிரதமர் மோடி வெளியிட்டார்.
- முதலில் மூலம், அதன் கீழ் இந்தியில் அதன் ஒலி மாற்றம், அதன் கீழ் இந்தியில் செய்யுள் வடிவில் மொழி பெயர்ப்பு, அதனைத் தொடர்ந்து அதன் உரைநடை விளக்கம் என்று முழுமையான வடிவம் பெற்றுள்ளது. தவிர 1926 இல் இருந்து இன்று வரை வெளிவந்த பல்வேறு இந்தி மொழிபெயர்ப்பு பற்றிய தகவல்கள் திரட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.
- மேலும் தமிழின் சிறப்பு, தமிழர்கள் தமிழுக்கு அளிக்கும் முக்கியத்துவம், தொல்காப்பியம் முதல் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் ஆகிய அனைத்து சங்க நூல்கள் பற்றிய விவரங்கள், திருக்குறள் பற்றி பண்டைய நூல்களில் பண்டைய புலவர்கள் கூறியுள்ள கூற்றுகள், திருக்குறள் பொருள் விளக்கம், அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பால் பற்றிய தனி விளக்கம், திருக்குறளின் தனிச்சிறப்பு போன்ற பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன.
- திருக்குறள் மொழி பெயர்ப்பு மட்டும் இன்றி தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியம் பற்றியும் இந்தியில் எடுத்துக் கூறி, தமிழ் இலக்கியத்தில் திருக்குறளின் இடமும், முக்கியத்துவமும் என்ன என்பதை விளக்கிக் கூறும் சிறப்பு மிக்க மொழி பெயர்ப்பாகவும் அமைந்துள்ளது அதன் சிறப்பு.

## சர்வதேச தொழில்நுட்ப உச்சி மாநாடு

- தமிழ்நாடு மின்னணு நிறுவனம் – எல்காட் (ELCOT) சார்பில் ‘தொழில்நுட்பம், தொழில் முனைவோர் மற்றும் திறன் வளர்ப்பு’ என்ற கருத்துருவில் மாபெரும் உச்சி

+91 - 94427 11140
exampivot.tsi@gmail.com

மாநாடு சென்னையில் அடுத்த ஆண்டு மார்ச் 23 முதல் 25 ஆம் தேதி வரை நடத்தப்பட உள்ளது. இதற்கான அறிமுக நிகழ்வு சென்னை கிண்டியில் உள்ள நட்சத்திர விடுதியில் டிசம்பர் 8 ஆம் தேதியன்று நடைபெற்றது.

- தமிழகம் 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டரில்லியன் பொருளாதார நிலையை அடைய இலக்கு வைக்கப்பட்டுள்ளது.
- அதில் தகவல் தொழில்நுட்பத் துறையில் 100 பில்லியன் டாலர் பங்களிப்பு இருக்க வேண்டுமென தீர்மானித்துள்ளோம். அதன் ஒரு பகுதியாக 'யூமாஜின் சென்னை' என்ற தலைப்பில் மாபெரும் உச்சி மாநாடு சென்னையில் நடத்தப்பட உள்ளது.

## புளூ ஓஷன் விருது - 2022

- பிரான்ஸ் நாட்டுடன் இணைந்து செயலாற்ற இருக்கிறோம். இதில் பசுமை போக்குவரத்து, டிஜிட்டல் எதிர்காலம், அக்ரிநெக்ஸ்ட், காலநிலை மாற்றம், சுகாதாரம், புதிய தொழில்நுட்பம் ஆகிய 7 பிரிவுகளில் 100 க்கும் மேற்பட்ட கருத்தரங்குகள் நடைபெற உள்ளன.
- இந்த மாநாட்டில் 'புளூ ஓஷன்' விருதுகள் அறிமுகப்படுத்தப்டுகிறது. இந்த விருது தொழில் முனைவோர் தங்களின் புதுமையான சிந்தனைகளை முன்னெடுக்க தொடக்கமாக இருக்கும்.

## அனைவருக்கும் நல வாழ்வுத் திட்டம் தமிழகம் முதலிடம்

- அனைவருக்கும் நலவாழ்வு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதில் நாட்டிலேயே முதலிடம் பெற்று தமிழகம் சாதனை படைத்துள்ளது.

- அனைத்து மக்களுக்கும் தரமான, இலவச மருத்துவ சேவை வழங்கப்படுவதை நோக்கமாக கொண்டது “அனைவருக்கும் நலவாழ்வு திட்டம்” ஆண்டுதோறும் டிசம்பர் 12 ஆம் தேதி அனைவருக்கும் நலவாழ்வுத் திட்ட தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்த ஆண்டில், “நாம் விரும்பும் ஆரோக்கியமான எதிர்கால உலகத்தை அனைவருக்கும் உருவாக்குவோம்” என்ற மையக் கருத்துடன் இதற்கான விழா, உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் கடந்த 2 நாட்களாக டிசம்பர் 10 மற்றும் 11 தேதிகளில் கொண்டாடப்பட்டது.
- தமிழகத்தில் செயல்பட்டு வரும் அனைவருக்கும் நலவாழ்வு மையங்களில் கடந்த அக்டோபர் 12 ஆம் தேதி முதல் டிசம்பர் 8 ஆம் தேதி வரை 22.59 லட்சம் பேருக்கு தொலைத்தொடர்பு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.
- அந்த வகையில் நாட்டிலேயே தமிழகம் முதலிடம் பிடித்ததற்கான பாராட்டு சான்றிதழ், கேடயத்தை தமிழ்நாடு தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷுக்கு, மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா வழங்கி கவுரவித்தார்.

## 11 ஆம் நூற்றாண்டை சேர்ந்த சோழர் கால கல்வெட்டு கண்டெடுப்பு

- செங்கம் அடுத்த பாய்ச்சல் கிராமத்தில் 11 ஆம் நூற்றாண்டில் கோயிலுக்கு தானம் வழங்கிய கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளதாக செங்கண்மா வரலாற்று ஆய்வு நடுவம் தெரிவித்துள்ளது.
- இது குறித்து ஆய்வு நடுவத்தின் தலைவர் பிரேம் ஆனந்த் கூறியதாவது திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த பாய்ச்சல் கிராமத்தில்,

கண்ணக்குருக்கை செல்லும் சாலையில் உள்ள வேப்ப மரத்தடியில் கல்வெட்டு இருந்தது. இதை படியேற்றம் செய்து ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

- இதில் 11 ஆம் நூற்றாண்டை சேர்ந்த வீர ராஜேந்திர சோழர் கால கல்வெட்டு என்பது தெரிய வருகிறது. கோயிலுக்கு தானமாக நிலம் வழங்கியது குறித்து குறிப்பிடப் பட்டுள்ளது.
- இக்கல்வெட்டில் ”ஸ்வஸ்தி வீர ராஜேந்திர சோழ தெவர்குயாண்டு ழந 3 வது பெண்ணை வடகரை வாணகபாடி ஆடை நாட்டு நல்லூர்... கயா திருவாலீசுரமுடையார்” எனும் வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.
- 11 ஆம் நூற்றாண்டில் வீர ராஜேந்திர சோழர் காலத்தில் வாலீஸ்வரமுடையார் என்ற கோயிலுக்கு தானமாக நிலம் வழங்கி உள்ளதாக கூறப்படுகிறது. கல்வெட்டின் மேற்பரப்பில் சூலம் செதுக்கப்பட்டுள்ளது.
- கல்வெட்டில் உள்ள எழுத்துகளில் பெண்ணை வடகரை என்பது தென்பெண்ணை ஆற்றின் வடகரைப் பகுதியாகும். ஆடை நாடு என்பது ஆடையூர் நாடாகும். திருவண்ணாமலை, செங்கம் பகுதியை உள்ளடக்கியதாகும். வாணகபாடி என்பது திருக்கோயிலூரை குறிப்பதாகும்.
- பாய்ச்சல் மற்றும் கண்ணகுருக்கை கிராமங்களில் வாலீஸ்வரமுடையார் கோயில் இருந்திருக்கலாம். கண்ணகுருக்கை கிராமத்தில் சிவாலயம் துறையினர் கள ஆய்வு மேற்கொண்டால், இக்கோயிலை பற்றி வரலாறு கிடைக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## பாரத் நெட் திட்டம்

- தமிழகத்தில் கிராமப்புறங்களுக்கு இணையதள இணைப்பு வழங்கும் பாரத் நெட் திட்டத்தை செயல்படுத்த ரூ.184 நிதி ஒதுக்கி அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (Tanfi Net) தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் அதிவேக இணையதள இணைப்பு வழங்கும் பாரத்நெட் 2 ஆம் கட்ட திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.
- இத்திட்டத்தின் கீழ், பல்வேறு தொகுப்புகளாக பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், 'பாரத் நெட் லாஸ்ட் மைல் கனெக்டிவிட்டி' திட்டத்துக்கு ரூ.184 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசு 2022 - 23 நிதியாண்டுக்கு மாநிலங்களின் மூலதன முதலீடுகளுக்கான சிறப்பு நிதியுதவி திட்டத்தின் 5 ஆம் பாகத்தில் நிதியுதவி பெறுவதற்கான திட்டங்களை சமர்ப்பிக்கும்படி மாநில அரசுகளுக்கு அறிவுறுத்தியது.

## நம்ம ஸ்கூல் பவுண்டேஷன் திட்டம்

- முன்னாள் மாணவர்கள் மூலம் அரசுப் பள்ளிகளை மேம்படுத்தும் 'நம்ம ஸ்கூல் பவுண்டேஷன்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் டிசம்பர் 19 அன்று தொடங்கி வைத்தார்.
- ஒவ்வொரு பள்ளிக்கும், அந்தப் பள்ளியில் படித்தவர்கள் உதவ வேண்டும். இதேபோல ஒரு முன்னெடுப்பை தமிழக அரசு சார்பில் மேற்கொள்ள உள்ளோம்.
- இந்த திட்டம் மூலம், அரசுப் பள்ளிகளில் பயின்று, தற்போது பல்வேறு நிறுவனங்களில் உயர்ந்த பதவியில் இருக்கும் முன்னாள் மாணவர்கள், தொழிலதிபர்களாக உள்ள முன்னாள் மாணவர்கள், சமூக அக்கறை கொண்ட

நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதி மூலம் அரசுப் பள்ளிகளைத் தத்தெடுத்து, சுற்றுச்சுவர் அமைத்தல், வர்ணம் பூசுதல், இணையதள வசதி, சுகாதாரமான கழிப்பறைகள், ஆய்வகங்கள் நூலகங்கள் போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.

## 10 இலக்க மக்கள் ஐ.டி.

- தமிழக அரசின் சேவைகளை பயனாளிகளுக்கு விரைவாக, எளிதாக வழங்கும் நோக்கில், பொது மக்களுக்கு பிரத்யேக அடையாள எண்ணுடன் கூடிய ‘மக்கள் ஐ.டி.’ வழங்குவதற்கு தமிழக அரசு ஒப்பந்தம் கோரியுள்ளது.
- தேசிய அளவிலான ஆதார் அட்டை போல, தமிழகத்தில் வசிக்கும் மக்களை வயது, பாலினம், சமூக அடிப்படையில் கணக்கிட்டு 10 முதல் 12 இலக்கத்திலான ‘மக்கள் ஐ.டி.’ எண் வழங்கப்பட உள்ளது.
- கடந்த 2013 ஆம் ஆண்டு அதிமுக ஆட்சிக் காலத்தில் ஆளுநர் உரையிலும், அதைத் தொடர்ந்து பட்ஜெட்டிலும் ‘மக்கள் ஐ.டி.’ குறித்த அறிவிப்பு வெளியானது.
- அதாவது, மாநில குடும்ப தரவு தளம் (எஸ்ஆர்டிஎச்) உருவாக்கப்பட்டு, அதில் தேசிய மக்கள்தொகை பதிவேட்டில் இருந்து விவரங்களை பெற்று, பயோ மெட்ரிக் தரவுகளை பயன்படுத்தி, அனைத்து துறைகளின் சேவைகளையும் வழங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
- இதைத் தொடர்ந்து தகவல் தொழில்நுட்பத் துறையால் அதற்கான அரசாணையும் 2013 நவம்பர் 29 ஆம் தேதி வெளியிடப்பட்டது.
- இந்த திட்டத்தின் கீழ், பொது விநியோக திட்டம், முதியோர் ஓய்வூதியம், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் வரும் 100 நாள் வேலை, முதல்வரின் பசுமை வீடு,

சுகாதாரத் துறையின் மருத்துவக் காப்பீடு, தொழிலாளர் நலத் துறையின் நல வாரிய உதவித் தொகைகள், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான உதவித் தொகை மற்றும் சமூக நலத் துறை, வருவாய், பதிவுத் துறை, பள்ளிக் கல்வித் துறை, கருவூலம் மற்றும் கணக்கு துறை ஆகிய துறைகளின் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

- ‘உங்கள் வாடிக்கையாளரை தெரிந்து கொள்ளுங்கள்’ (KYC) என்பதன் அடிப்படையில் முகவர், குடும்ப உறுப்பினரின் பிறந்த தேதி, பாலினம் உள்ளிட்ட விவரங்களை பெறுவதற்கான அடிப்படை பணிகளும் தொடங்கப்பட்டது.
- அதன் பிறகு 6 ஆண்டுகளாக இதற்கான பணிகள் நடந்த நிலையில், கடந்த 2019 இல் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் ஓர் அறிவிப்பை அப்போதைய முதல்வர் பழனிசாமி வெளியிட்டார்.
- பிறப்பு மற்றும் இறப்பு வரை அரசால் வழங்கப்பட வேண்டிய அனைத்து சேவைகளையும் விண்ணப்பம் ஏதும் இல்லாமல் தாமாகவே முன்வந்த மக்களுக்கு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## குடிமகன் பெட்டகம்

- குடிமக்கள் எண்ணை பெற தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் வசதி செய்யப்பட்டுள்ளது.
- இதற்கான இணையதளத்தில் நமது அடிப்படை விவரங்களை பதிவு செய்து, கைபேசிக்கு வரும் ஒரு முறை கடவுச் சொல்லை (OTP) பயன்படுத்தி மக்கள் எண் எனப்படும் ‘மக்கள் ஐ.டி.’யை பெறலாம்’ என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

- 'மக்கள் ஐ.டி'யை பெறுவதற்கான அடிப்படை மென்பொருள் தயாரிப்புக்கான ஒப்பந்தப் பணியை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை தற்போது தொடங்கியுள்ளது.

## விளையாட்டு

### சாம்பியன் பட்டம் வென்றது அர்ஜெண்டினா

- பிஃபா 22 வது உலகக் கோப்பை கால்பந்து தொடர் கடந்த மாதம் 20 ஆம் தேதி கத்தாரில் கோலகலமாக தொடங்கியது. 32 அணிகள் கலந்து கொண்டது. இறுதி ஆட்டம் டிசம்பர் 18 அன்று தோகாவின் லுசைல் நகரில் உள்ள லுசைல் மைதானத்தில் நடைபெற்றது.
- இறுதி ஆட்டத்தில் லயோனல் மெஸ்ஸி தலைமையிலான அர்ஜெண்டினா அணி பெனால்டி ஷுட் அவுட்டில் 4 - 2 என்ற கோல்க் கணக்கில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.
- 36 வருடங்களுக்கு பிறகு தற்போது தான் அர்ஜெண்டினா வாகை சூடியுள்ளது. அந்த அணி உலகக் கோப்பையை வெல்வது இது 3 வது முறையாகும்.
- இதுவரை 3 உலகக் கோப்பைகளை அர்ஜெண்டினா வென்றுள்ளது. இதற்கு முன்னர் 1978 மற்றும் 1986 ஆம் ஆண்டுகளில் கோப்பையை வென்றிருந்தது.
- சாம்பியன் பட்டம் வென்ற அர்ஜெண்டினா அணிக்கு கோப்பையுடன் ரூ.342 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது. 2 வது பிரான்ஸின் அணிக்கு ரூ. 244 கோடி வழங்கப்பட்டது.
- பிரான்ஸின் கிளியான் பாப்பே 8 கோல்கள் அடித்து, அதிக கோல்கள் அடித்த வீரருக்கான 'கோல்டன் பூட்' என்ற விருதை வென்றார். தொடரின் சிறந்த வீரருக்கான 'கோல்டன் பால்' விருது மெஸ்ஸிக்கு வழங்கப்பட்டது.

### லயோனல் மெஸ்ஸி

- உலகக் கோப்பை கால்பந்து தொடரில் பிரான்ஸ் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் பெனால்டி வாய்ப்பில் அர்ஜெண்டினாவின் லயோனல் மெஸ்ஸி கோல் அடித்தார்.
- இதன் மூலம் ஒரே உலகக் கோப்பை தொடரில் லீக் சுற்று, கால் இறுதி சுற்று, அரை இறுதி சுற்று, இறுதிப்போட்டி என அனைத்திலும் கோல் அடித்த முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்தார் மெஸ்ஸி.

### பி.டி.உஷா

- இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தல் டெல்லியில் டிசம்பர் 10 ஆம் தேதியில் நடைபெற்றது. அதில் தலைவர் பதவிக்கு பி.டி.உஷாவை தவிர மற்ற யாரும் போட்டியிடவில்லை. இதனால் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் முதல் பெண் தலைவராக பி.டி.உஷா தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 58 வயதான பி.டி.உஷா கடந்த 1984 இல் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் 400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கம் வெல்லும் வாய்ப்பை நூலிழையில் தவற விட்டிருந்தார். எனினும் ஆசிய விளையாட்டில் 4 தங்கம் உட்பட 11 பதக்கங்களை வென்று குவித்தார்.
- இந்திய மற்றும் ஆசிய அளவில் தடகளத்தில் 20 ஆண்டுகள் ஆதிக்கம் செலுத்திய பி.டி.உஷா இறுதியாக 2000 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.
- இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் 95 ஆண்டு கால வரலாற்றில் சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வென்ற, ஒலிம்பிக்கில் பங்கேற்ற ஒருவரை தலைவராக தேர்ந்தெடுப்பது இதுவே முதல் முறை.

- 'பயோலி எக்ஸ்பிரஸ்' என அன்புடன் அழைக்கப்படும் பி.டி.உஷா கடந்த ஜூலை மாதம் பாஜகவினால் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.
- 1934 ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டியில் விளையாடிய மகாராஜா யாதவிந்திரா சிங்கிற்குப் பிறகு நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய முதல் விளையாட்டு வீராங்களை உஷா ஆவார். யாதவிந்திரா சிங் இந்திய ஒலிம்பிக் சங்கத்தில் 1938 முதல் 1960 வரை தலைவர் பதவியில் இருந்தார்.
- இந்திய ஒலிம்பிக் சங்க துணைத் தலைவர்களாக ககன் நரங், ராஜலட்சுமி சிங் தியோ ஆகியோர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## முக்கிய நபர்கள்

### திருமதி உலக அழகி

- திருமணமான பெண்களுக்காக கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் திருமதி உலக அழகி போட்டி (Mrs. World) நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான போட்டி அமெரிக்காவில் நடைபெற்றது.
- இதில் 63 நாடுகளை சேர்ந்த திருமணமான பெண்கள் கலந்து கொண்டனர். இந்தியாவின் சார்பில் திருமதி இந்தியா அழகி பட்டம் வென்ற சர்கம் கவுஷல் (Sargam Koushal) பங்கேற்றார்.
- அமெரிக்காவின் லாஸ்வேகாஸ் நகரில் டிசம்பர் 18 அன்று இறுதிச் சுற்றுப் போட்டி நடைபெற்றது. இதில் இந்திய பெண் சர்கம் கவுஷல் (Sargam Koushal) முதலிடம் பெற்று பட்டத்தை வென்றார்.
- தெற்கு பசிபிக் தீவு நாடான பாலினேஷியா சேர்ந்த பெண் 2 ஆம் இடத்தையும், கனடா பெண் 3 வது இடத்தையும் பெற்றனர்.

- இதற்கு முன்பு கடந்த 2001 ஆம் ஆண்டில் இந்தியாவை சேர்ந்த மருத்துவர் அதிதி திருமதி உலக அழகி பட்டத்தை வென்றார். 21 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவுக்கு மீண்டும் இந்த பட்டம் கிடைத்துள்ளது.
- காஷ்மீரின் ஜம்மு பகுதியை சேர்ந்த ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி கவுஷலின் மகள் சர்கம் கவுஷல். கடந்த 2018 ஆம் ஆண்டில் கடற்படை அதிகாரி ஆதித்யாவை திருமணம் செய்தார். திருமணத்துக்குப் பிறகு ஆசிரியையாகவும் பணியாற்றி உள்ளார்.

**ரக்சயா**

- செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் நால்வர் கோயில் பேட்டை பகுதியை சேர்ந்த கட்டிட தொழிலாளி மனோகர். இவரது மகள் ரக்சயா (20), கல்லூரி படிப்பை முடித்துள்ளார். தன்னுடைய சிறு வயது முதல் தான் அழகிப் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற லட்சியத்தோடு, குடும்ப வறுமையையும் பொருட்படுத்தாமல் தனது சொந்த முயற்சியில் பகுதி நேர வேலை செய்து தன்னை தயார்ப்படுத்து கொண்டார்.
- 2018 இல் நடந்த மோனோ ஆக்டிங் நிகழ்வில் பங்கேற்று வென்றார். இதையடுத்து, அரசு சார்பில் மலேசியா அழைத்து சென்று கௌரவிக்கப்பட்டார். கடந்த செப்டம்பரில் ஃபாரெவர் ஸ்டார் இந்தியா அவார்ட்ஸ் அமைப்பு நடத்திய மாநில அளவிலான அழகிகள் போட்டியில் மிஸ் தமிழ்நாடு பட்டத்தை வென்றார்.
- இந்நிலையில் ஜெய்பூரில் மேற்கண்ட அமைப்பின் சார்பில் மிஸ் இந்தியா அழகி போட்டி கடந்த 19 ஆம் தேதி நடைபெற்றது. இதில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 75 பேர் பங்கேற்றனர். இதில் ரக்சயா மிஸ் இந்தியா போட்டியில் 2 ஆம் இடம் பிடித்து சாதனை படைத்தார்.

## ஆங் சான் சூகி

- தென்கிழக்கு ஆசிய நாடான மியான்மரில் ராணுவ ஆட்சியை எதிர்த்து பல ஆண்டுகள் போராட்டம் நடத்தியவர் ஆங் சான் சூகி (77), இவர் தலைமையிலான தேசிய ஜனநாயக லீக் கூட்டணி கடந்த 2020 இல் நடந்த தேர்தலில் ஆட்சியை பிடித்தது.
- தேர்தலில் மோசடி நடந்ததாகக் கூறி ஆங் சான் சூகியின் ஆட்சியை கடந்த 2021 பிப்ரவரியில் ராணுவம் கவிழ்த்தது. இவர் மீது அலுவல் ரகசிய சட்டங்களை மீறியது, தேர்தல் முறைகேடு உள்ளிட்ட 7 வழக்குகளில் ஆங் சான் சூகிக்கு இதுவரை 26 வருடம் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
- இந்நிலையில் சூகி மீது எஞ்சியுள்ள 5 ஊழல் வழக்குகளில் ராணுவ நீதிமன்றம் டிசம்பர் 30 அன்று தீர்ப்பு வழங்கியது. அதில் அவருக்கு மேலும் 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அவரது மொத்த தண்டனை காலம் 33 ஆண்டுகளாக மாறியுள்ளது.

## சாவோ பாவ்லோ – பீலே

- மூன்று முறை உலகக் கோப்பைகளை வென்று சாதனை படைத்த பிரேசில் கால்பந்து அரசனும், கடந்த நூற்றாண்டின் சிறந்த விளையாட்டு வீரர்களில் ஒருவராகவும் திகழ்ந்த ஜாம்பவான் பீலே டிசம்பர் 29 அன்று இரவு காலமானார்.
- பீலே பிரேசிலின் சாண்டோஸ் கிளப் மற்றும் பிரேசில் தேசிய அணிக்காக சுமார் இரு தசாப்தங்கள் விளையாடியவர். “சாவோ பாவ்லோ” தெருக்களில் காகித கந்தல்களை சாக்ஸில் அடைத்து உதைத்து தனது கால்பந்து பயணத்தை தொடங்கிய அவர், பின்னாளில் கால்பந்து விளையாட்டுக்கான உலகளாவிய தூதரானார்.

- 1940 ஆம் ஆண்டு அக்டோபர் 23 ஆம் தேதி பிரேசிலில் உள்ள மினாஸ் ஜெரைஸ் மாகாணத்தின் உட்பகுதியில் உள்ள சிறிய நகரமான ட்ரெஸ் கோரகோஸில் பிறந்தார் பீலே, அவரது பெயர் எட்சன் அரான்டெஸ் நாசிமெண்டோ.
- பிரேசில் அணிக்காக 1958, 1962, 1970 ஆம் ஆண்டுகளில் உலகக் கோப்பையை வென்று கொடுத்தார் பீலே. தேசிய அணி, கிளப், சீனியர் போட்டிகள் என ஒட்டுமொத்தமாக 1,283 கோல்களை அடித்து அசத்தினார்.
- “கால்பந்து அரசன்” என அழைக்கப்பட்ட அவர், தனது 17 வயதில் 1958 ஆம் ஆண்டு சுவீடனில் நடைபெற்ற உலகக் கோப்பை கால்பந்து தொடரில் அறிமுகம் ஆனார்.
- 1997 இல் பிரிட்டனின் ராணி 2 ஆம் எலிசபெத் பீலேவுக்கு ‘நைட்’ பட்டம் வழங்கினார். பிரேசில் நாட்டின் கறுப்பின மக்களின் பெருமைக்கு அச்சாணியாக திகழ்ந்த பீலே, ‘கருப்பு முத்து’ எனவும் அழைக்கப்பட்டார்.
- 1977 ஆம் ஆண்டு அனைத்து விதமான கால்பந்து போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெற்றார் பீலே. ஓய்விற்கு பிறகு அரசியல்வாதி, பிரேசிலின் விளையாட்டுத் துறை அமைச்சர், தொழிலதிபர், யுனெஸ்கோ மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் தூதராகவும் இருந்தார். மேலும் திரைபடங்கள், விளம்பரங்கள், இசை ஆல்பத்திலும் நடித்தார்.

## முக்கிய விருதுகள்

### கேல் ரத்னா விருது

- தமிழக டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமலுக்கு மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருதை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நவம்பர் 30 அன்று வழங்கினார்.

- சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் இந்திய வீரர், வீராங்கனைகளுக்கு ஆண்டுதோறும் தயான் சந்த் கேல் ரத்னா, அர்ஜீனா விருதும், சிறந்த பயிற்சியாளர்களுக்கு துரோணாச்சார்யா விருதும், வாழ்நாள் சாதனையாளருக்கு விருதும் வழங்கப்பட்டு வருகிறது.
- இந்த ஆண்டுக்கான தேசிய விளையாட்டு விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் நவம்பர் 30, 2022 நடைபெற்றது.
- தமிழக டேபிள் டென்னிஸ் விரர் சரத் கமலுக்கு கேல் ரத்னா விருது வழங்கப்பட்டது. இதே போல் தமிழகத்தை சேர்ந்த செஸ் வீரர் பிரக்ஞானந்தா, துப்பாக்கி சுடுதல் வீராங்கனை இளவேனில் வாலறிவன், மாற்றுத்திறனாளி பேட்மிண்டன் வீராங்கனை ஜெர்லின் அனிகா ஆகியோருக்கு அர்ஜீனா விருது வழங்கப்பட்டது.
- டெல்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் இந்த விழா நடைபெற்றது. விழாவில் வீரர், வீராங்கனைகளுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருதுகளை வழங்கி பாராட்டினார்.
- விழாவில் மொத்தம் 25 பேருக்கு அர்ஜீனா விருது, 4 பேருக்கு துரோணாச்சார்யா விருது, 4 பேருக்கு மேஜர் தயான்சந்த் விருது வழங்கப்பட்டது. இதில் கேல் ரத்னா விருது ரூ.25 லட்சம் ரொக்கம், பதக்கம், பாராட்டுப் பத்திரம் ஆகியவை அடங்கியது. அர்ஜீனா விருது ரூ.15 லட்சம் ரொக்கம், வெண்கலச் சிலை, பாராட்டுப் பத்திரம் ஆகியவை அடங்கியது.

## எர்த்ஷாட் பரிசு

- சுற்றுச்சூழல் பங்களிப்புக்காக வழங்கப்படும் மதிப்புமிக்க எர்த்ஷாட் பரிசை (Earthshot Prize) இந்த ஆண்டு இந்திய ஸ்டார்ட்அப் நிறுவனம் கெய்தி (Kheyti) வென்றுள்ளது.

- காலநிலை மாற்றம் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. காலநிலை மாற்றத்தின் தீவிரத்தைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.
- இந்நிலையில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காக உழைக்கும் நிறுவனங்களை ஊக்குவிக்க பிரிட்டன் இளவரசர் வில்லியம் மற்றும் புகழ் பெற்ற திரைப்பட இயக்குநர் டேவிட் அட்டன்பரோ இணைந்து 2020 ஆம் ஆண்டு எர்த்ஷாட் (Earthshot) என்ற பெயரில் பரிசை அறிமுகப்படுத்தினர்.
- பரிசுக்கு தேர்வாகும் ஒவ்வொருவருக்கும் 10 லட்சம் பவுண்ட் (ரூ.கோடி) பரிசாக வழங்கப்படும். 'இயற்கை பாதுகாப்பு', 'காற்று தூய்மை', 'கடல் புத்தாக்கம்', 'கழிவு இல்லாத உலக', 'காலநிலை நடவடிக்கை' ஆகிய ஐந்து பிரிவுகளில் இந்த பரிசு வழங்கப்படுகிறது.
- பரிசுக்கான இறுதிப் பட்டியலில் இடம்பெற்ற 5 ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு இளவரசர் வில்லியம் பரிசு வழங்கி கவுரவித்தார்.